தேதி: 21-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.101/2021

வழக்கு சாட்சி எண். PW2

| | |
|---|---|
| பெயர்: ராமேஸ்வரி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வாழவல்லானில் குடியிருந்து எனது சொந்த கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜெயபிரகாஷ் என்பவர் எனது கணவர் ஆவார். எனது கணவர் ஊறுகாய் கம்பெனி நடத்தி வந்தார். எனக்கு இரண்டு பெண் மற்றும் ஒரு ஆண் பிள்ளைகள் உள்ளார்கள்.

2. நானும் எனது கணவரும், தினசரி தாமிரபரணி ஆற்றுபாலத்தில் நடைபயிற்சி செய்வது வழக்கமாகும். கடந்த 19.07.2020 ம் தேதி காலை 6.00 மணிக்கு எனது வீட்டில் இருந்து இருச்சக்கர வாகனத்தில் ஏறி நானும், எனது கணவரும் ஏரல் ஆற்றுப்பாலத்திற்கு சென்றோம்.

3. பிறகு அங்கு வாகனத்தை நிறுத்திவிட்டு எனது கணவர் எனக்கு முன்பாக சென்று கொண்டு இருந்த போது இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்து எனது கணவரின் பின்புறம் வந்து அவரை இடித்து விட்டு கவனிக்காமல் சென்று விட்டார்.

4. அதன் காரணமாக எனது கணவருக்கு அவரது தலையின் இடதுப்பக்கத்தில் காயம் ஏற்பட்டது. அப்போது காயம் ஏற்பட்ட எனது கணவரை இராமசாமி என்பவரின் உதவியுடன் ஆட்டோவில் ஏரல் ஆரம்ப சுகாதரா நிலையத்திற்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சைஅளித்தோம்.

5. பிறகு திருச்செந்துார் எடிசன் மருத்துவமனைக்கு கொண்டு சென்று காலை 8.30 க்கு சேர்த்தோம். அங்கு எனது கணவருக்கு ஸ்கேன் எடுத்து பரிசோதிக்கப்பட்டார். பிறகு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி ஜெயராஜ் மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்க்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் மருத்துவமனையில் இறந்து போய்விட்டார்.

6. சம்பவம் குறித்து நான் ஏரல் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். புகார்மனுவில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிதான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்து எனது கணவருக்கு விபத்து ஏற்படுத்தினார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

<u>குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 21-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.101/2021

வழக்கு சாட்சி எண். PW3

| | |
|---|---|
| பெயர்: இராமசாமி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வாழவல்லானில் குடியிருந்து விவாசய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜெயபிரகாஷ் என்பவர் எனது ஊரைச்சேர்ந்தவர் ஆவார். இறந்து போன நபர் ஊறுகாய் வியாபாரம் செய்து வந்தார்.

2. கடந்த 19.07.2020ம் தேதி காலை 6.00 மணிக்கு நான் வழக்கமாக நடைபயிற்சி செய்யும் போது எனக்கு தெரிந்த ஜெயபிரகாஷ் என்பவரும் அவரது மனைவியும் அங்கு வந்தார்கள். நான் மேற்சொன்ன இருநபர்களுக்கு பின்னால் நடந்து வந்து கொண்டு இருந்த போது பின்னால் இருந்து வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்து ஜெயபிரகாஷ் மீது பின்புறம் வந்து அவரை இடித்து விபத்து ஏற்படுத்தினார்.

3. இறந்து போன ஜெயபிரகாஷ் என்பவருக்கு விபத்தின் காரணமாக தலையின் இடதுப்பக்கத்தில் காயம் ஏற்பட்டது. அப்போது காயம் ஏற்பட்ட

நபரை ஆட்டோவில் ஏரல் ஆரம்ப சுகாதரா நிலையத்திற்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சைஅளித்து விட்டு பின்னர் திருச்செந்துார் எடிசன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பிறகு நான் வீட்டிற்கு வந்து விட்டோம். பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் மருத்துவமனையில் இறந்து போய்விட்டார்.

4. புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடைதயது தான். அந்த அறிவேன் சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிதான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

<u>குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 21-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.101/2021

வழக்கு சாட்சி எண். PW4

| | |
|---|---|
| பெயர்: ஜெயவானவாமலை | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது வாழவல்லானில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜெயபிரகாஷ் எனக்கு தம்பி ஆவார். இறந்து போன எனது தம்பி ஊறுகாய் வியாபாரம் செய்து வந்தார்.

2. கடந்த 19.07.2020 ம் தேதி காலை 6.00 மணிக்கு நடைபயிற்சி செய்யும் போது ஜெயபிரகாஷ் என்பவரும் அவரது மனைவியும் அங்கு சென்ற போது பின்னால் இருந்து வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்து ஜெயபிரகாஷ் மீது விபத்து ஏற்படுத்தினார்.

3. இறந்து போன ஜெயபிரகாஷ் என்பவருக்கு விபத்தின் காரணமாக தலையின் இடதுப்பக்கத்தில் காயம் ஏற்பட்டது. அப்போது காயம் ஏற்பட்ட எனது தம்பியை ஏரல் ஆரம்ப சுகாதரா நிலையத்திற்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு பின்னர் திருச்செந்தூர் எடிசன்

மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். நான் திருநெல்வேலி மருத்துவமனைக்கு எனது தம்பி சிகிச்சைக்கு சென்ற போது நான் சென்று எனது தம்பியை பார்த்தேன்.

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 21-03-2023

**வாக்குமூலம்**

**குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்**

**வழக்கு எண். CC.101/2021**

**வழக்கு சாட்சி எண். PW5**

பெயர்: முருகேசன் ஜாதி :

தந்தை பெயர் : தொழில்:

கிராமம்: சமயம்:

தாலுகா: வயது:

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது மணலூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.07.2020ம் தேதி மாலை 6.30 மணிக்கு நானும் எனது நண்பர் சக்தி வேலும் தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் நடந்து சென்ற போது நடந்த விபத்து சம்மந்தமாக வரைபடம் வரைந்தார்கள். அதில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் சக்திவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த 1வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்

கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 21-03-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.101/2021

வழக்கு சாட்சி எண். PW6

| | |
|---|---|
| பெயர்: சக்திவேல் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது சண்முகபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 19.07.2020ம் தேதி காலை 6.30 மணிக்கு இரண்டு காவலர்கள் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். நானும் எனது நண்பர் முருகேசன் என்பவரும் ஏரல் தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் நடந்து சென்ற போது நடந்த விபத்து சம்மந்தமாக வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பார்வைமகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்

கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.